**ஏப்ரல் – 27**

**"கிறிஸ்து யேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." - பிலி 2 : 5**

கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்பது உண்மையாகவே, நியாயமாகக் கஷ்டப்பட்டு முயற்சி செய்கிற ஒரு தேவையாயிருக்கிறது. அதாவது, தேவனுடைய யுகங்களின் பெரிய ஏற்பாட்டில் சொல்லியிருப்பது போல, தாழ்மையாகவும், உண்மையாகவும் அவருடைய சித்தத்திற்குத் தன்னையே ஒப்புவிக்கிறதும், அவர் கரத்தில் வைத்திருக்கும் முடிவுகளை புத்தி நுட்பத்துடன் உயர்வாக மதிக்கிறதினால், எல்லா சக்தியையும் அவருடைய சித்தத்தின் நிறைவேறுதலுக்கு அர்ப்பணம் செய்கிறதுமான, ஒரு மனது, கிறிஸ்து யேசுவிலிருந்த அதே சிந்தையினால் இவ்விதமாக நிரப்பப்பட்டிருந்தால், அவரைப் போலவே நாமும் உலகப்பிரகாரமான காரியங்களில் சிக்கிக் கொள்ளுவதிலிருந்து எவ்வளவு கூடுமோ, அவ்வளவு பிரிந்திருக்கவும், கூடுமானவரை நமது நேரத்தைத் தடையின்றிக் கர்த்தருடைய ஊழியத்திற்காக உடையவர்களாயிருந்து பிறகு அந்த ஊழியத்திற்கு எல்லா சக்தியையும், திறமையையும், முயற்சியையும் அர்ப்பணம் செய்யவும் விரும்புவோம். **-Z ’02, 265 (R 3069).**

தான் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்று மானிட சுபாவத்தை எடுப்பதற்கு முன்னிருந்த தனது நிலையில் தன்னையே வெறுமையாக்கவும், சிலுவையின் அவமானமான மரணம் வரைக்கும் தன்னையே பலியிடவும், கிறிஸ்து யேசுவிலிருந்த சிந்தை முடிவு செய்தது. இப்படிப்பட்ட குணம் நிச்சயமாக, தேவனிடத்தில் பிரதானமாய் அன்பு கூறுகிற ஒவ்வொருவரின் ஏற்ற மனப்பாங்காக இருக்கிறது. தன்னிடத்தில் பிரதானமாய் அன்பு கூறுவது ஒருவரை தற்புகழ்ச்சிக்கு நடத்துகிறது போல, தேவனிடத்தில் பிரதானமாய் அன்பு கூறுவது, தேவனை உயர்ந்த வேண்டுமென்று தன்னையே தாழ்த்துவதற்கு வழி நடத்துகிறது. உண்மையாகவே ஒருவன் தன்னைத்தான் தேவனுடைய வல்லமையான கையின் கீழ் தாழ்த்துகிறது போல, அவ்வளவு உண்மையாக கர்த்தர் தகுந்த காலத்தில் அவனை உயர்த்துவார். **-P ’33, 64.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஏசா 53; மத் 11:29; 20:26,27; 23:12; யோவா 13:14,15; ரோம 15:3; 2கொரி 8:9; பிலி 2:7,8; 1பேது 2:21; பிலி 3:7-9; எபி 13:13; நீதி 3:34; 15:33; 25:6,7; ஏசா 57:15; 66:2; எரே 45:5; லூக் 22:24-27; யாக் 4:6,10; 1பேது 5:3,5,6.

**கோபுர வாசிப்பு : Z ’11, 440 (R 4928).**

**வினாக்கள் :** கர்த்தருக்காக நான் இந்த வாரம் என்னைத் தாழ்த்தினேனா? எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன்கள் என்ன?